கொடைக்கானலில் இடம் வாங்க விற்க அணுகவும்.

கொடைக்கானல் மற்றும் மேல் மலைப் பகுதிகளில் எஸ்டேட், பல வகை தோட்டங்கள், வீடு கெஸ்ட் ஹவுஸ் விற்க எங்களை அணுகவும்

தொடர்புக்கு:
98426-99466, 78100 - 68421, 94884 - 20449

PRGI.NO.TNTAM/25/A1635

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS

மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்

காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.

No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 132 | 17-11-2025 | திங்கள் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி

Volume 01 | Issue: 132 | 17-11-2025 | Monday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

## பிஹாரில் புதிய அரசு பதவியேற்பு எப்போது? காந்தி மைதானத்தில் ஏற்பாடுகள் தீவிரம்

பாட்னா: நவ.17–

பிஹார் சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி அபார வெற்றி பெற்ற நிலையில், புதிய அரசு அமைக்கும் பணிகள் வேகமெடுத்துள்ளன. பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்கும் வகையில் நவம்பர் 19 அல்லது 20 ஆம் தேதி பதவியேற்பு விழா நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2025 பிஹார் சட்டப்பேரவை தேர்தலில் பாஜக 89 இடங்களில் வென்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது, அதைத் தொடர்ந்து நிதிஷ் குமாரின் ஐக்கிய ஜனதா தளம் 85 இடங்களை வென்றது. லோக் ஜனசக்தி (ராம்விலாஸ்) 19 இடங்களையும், எச்ஏஎம் 5 இடங்களையும், ராஷ்ட்ரிய லோக் மோர்ச்சா 4 இடங்களையும் வென்றன. எதிக்கட்சிகளின் மகா கூட்டணி 35 இடங்களை மட்டுமே வென்றது. ஒவைசி கட்சி 5 இடங்களிலும், பிஎஸ்பி ஒரு இடத்திலும் வெற்றி பெற்றது.

இந்த நிலையில், பிஹாரில் புதிய அரசு அமைக்கும் பணிகள் விறுவிறுப்பாக நடந்து வருகின்றன. பதவியேற்பு விழாவுக்காக பாட்னாவின் காந்தி மைதானத்தில் ஏற்பாடுகள் முழு வீச்சில் உள்ளன, இந்த நிகழ்வில் பிரதமர் மோடி மற்றும் பாஜக ஆளும் மாநிலங்களின் முதலமைச்சர்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

18வது பிஹார் சட்டப்பேரவை தேர்தல் முடிவுகளை தேர்தல் ஆணையம் இன்று ஆளுநர் ராஜேந்திர அர்லேகரிடம் சமர்ப்பிக்கும். அதன் பிறகு புதிய சட்டப்பேரவையை அமைப்பதற்கான அறிவிப்பு வெளியிடப்படும்.

17 வது சட்டப்பேரவையை கலைப்பதற்கு ஒப்புதல் அளிக்க முதல்வர் நிதிஷ் குமார் நாளை அமைச்சரவைக் கூட்டத்தை கூட்டியுள்ளார். அதன் பின்னர் அவர் ராஜ் பவனுக்குச் சென்று தனது ராஜினாமா கடிதத்தை ஆளுநரிடம் வழங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவர் பதவி விலகியவுடன், கூட்டணியின் அடுத்த தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக தேசிய ஜனநாயக கூட்டணியில் உள்ள கட்சிகள் தங்கள் சட்டப்பேரவை கட்சிக் கூட்டங்களை நடத்தும். அதன் பின்னர், தேசிய ஜன்நாயக கூட்டணியின் தலைவர்கள் ஆலோசித்து புதிய முதல்வர் மற்றும் அமைச்சரவையை தேர்ந்தெடுத்து, புதிய அரசாங்கத்தை அமைக்க ஆளுநரிடம் உரிமை கோருவார்கள்.

## கடந்த 4 ஆண்டுகளில் கோயில்கள் சார்பில் 2,800 இணைகளுக்கு சீர்வரிசைப் பொருட்களுடன் திருமணம்: அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்

சென்னை: நவ.17–

கடந்த 4 ஆண்டுகளில் கோயில்கள் சார்பில் 2,800 இணைகளுக்கு திருமணம் நடத்தி வைக்கப்பட்டு, சீர்வரிசைப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன என அமைச்சர் பி.கே.சேகர்பாபு கூறினார். சென்னை கொளத்தூர் சோமநாத சாமி கோயில் சார்பில் 4 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருள்களை அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு வழங்கினார். பின்னர் நிருபர்களை சந்தித்து அவர் பேசியதாவது: இந்த அரசு பொறுப்பேற்ற பின், 202223ம் நிதியாண்டில் 500 இணைகளுக்கு திருமணம் நடத்தி வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டு, ரூ.20 ஆயிரம் செலவில் சீர்வரிசை பொருட்களுடன் நடத்தி வைக்கப்பட்டன.

தொடர்ந்து, 2023 24ம் நிதியாண்டில் 600 இணைகளுக்கு தலா ரூ.50 ஆயிரம் செலவிலும், 202425ம் நிதியாண்டில் 700 இணைகளுக்கு தலா ரூ.60 ஆயிரம் செலவிலும், இந்த நிதியாண்டில் 1000 இணைகளுக்கு தலா ரூ.70 ஆயிரம் செலவிலும் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டன. அதில் ஒரு பகுதியாக இன்றைய தினம் 4 இணைகளுக்கு திருமணம் நடத்தி வைக்கப்பட்டது. கடந்த 4 ஆண்டுகளில் கோயில்கள் சார்பில் 2,800 இணைகளுக்கு திருமணம் நடத்தி வைக்கப்பட்டு, சீர்வரிசைப் பொருட்கள் வழங்கப்பட் டுள்ளன. இந்த ஆண்டில் மேலும் 1,000 திருமணங்களை நடத்திட முதலமைச்சர் உத்தரவிட் டுள்ளார்.



இத்திருமணங்கள் வரும் மார்ச் மாத இறுதிக்குள் நடத்தி முடிக்கப்படும். மாற்றுத் திறனாளிகளின் திருமணத்திற்கு அவர்களில் ஒருவர் மாற்றுத்திறனாளியாக இருந்தாலும் கோயில் திருமண மண்டபங்கள் சேவை கட்டணத்தை தவிர வேறு எந்த வாடகையும் இல்லாமல், வழங்கப்பட்டு வருகிறது. மேலும், கோயில்களின் சார்பில் மாற்றுத்திறனாளி இணைகளுக்கும் 4 கிராம் தங்கத் தாலியுடன் சீர்வரிசைப் பொருட்கள் வழங்கி இதுவரை 161 திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டுள்ளன. 400 ஆண்டுகள் பழமை வாய்ந்த கொளத்தூர், சோமநாத சாமி கோயிலுக்கு ரூ. 2.73 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வருகின்ற 30ம் தேதி குடமுழுக்கு நடத்தப்பட உள்ளது. இந்த அரசு பொறுபேற்ற நாள் முதல் இன்று நடைபெறும் 8 கோயில்களின் குடமுழுக்கையும் சேர்த்து இதுவரை 3,813 கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது.

ரூ.8,100 கோடி மதிப்பிலான 8,028 ஏக்கர் கோயில் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளதோடு, கோயில்களுக்கு சொந்தமான 2,20,502.84 ஏக்கர் நிலங்கள் அளவீடு செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த அரசு பொறுப்பேற்ற பின் உபயதாரர்கள் கோயில்களின் திருப்பணிக்கு ரூ.1,547.57 கோடியினை நன்கொடையாக அளித்துள்ளனர். திருவண்ணாமலை கார்த்திகை தீபம் முன்னேற்பாடு பணிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டத்தை அந்த மாவட்டத்தின் அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நாளை மறுதினம் திருவண்ணாமலையில் நடத்திட முதலமைச்சர் உத்தரவிட்டிருக்கின்றார். சிக்கல் சிங்காரவேல் கோயில் அர்ச்சகர் பக்தர்களிடம் பாஜக சின்னத்தை குறிப்பிட்டு பிரசார ம் செய்வது போன்ற வீடியோ குறித்து செய்தியாளர்கள் கேட்டதற்கு, கோயில்களின் அர்ச்சகர்கள் அரசியல் மனமாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

கோயிலுக்கு வருகின்ற பக்தர்களுக்கு தெய்வ சன்னிதானத்தில் அவர்களது மனம் குளிர்கின்ற வகையிலே நலத்தை நாடி பிரார்த்தனை செய்வது, அந்த தெய்வத்திற்குண்டான அபிஷேகம் மற்றும் தீபாராதனைகளில் கவனம் செலுத்த வேண்டுமே தவிர இதுபோன்ற அரசியல் சாயத்தை பூசிக் கொண்டால் அவர் சொன்ன அந்த சின்னத்தை ஆதரிப்பவரை தவிர்த்து மற்றவர்கள் அவரை எப்படி குருக்களாக ஏற்றுக் கொள்வார். இதுகுறித்து புகார் வந்திருக்கின்றது. இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளர் மூலம் இது குறித்து பரிசீலித்து, தேவைப் பட்டால் உரிய விசாரணை மேற்கொள்ளப்படும். இவ்வாறு அவர் கூறினார். இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை மண்டல இணை ஆணையர்கள் முல்லை, மோகனசுந்தரம், மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் சரிதா மகேஷ்குமார், மாநகராட்சி உறுப்பினர் நாகராஜன், உதவி ஆணையர்கள் சிவக்குமார், பாரதிராஜா, கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் மோகன், சந்துரு, மகேஷ்குமார் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

## தேர்தல் ஆணையம் வாய் திறக்காததால் பாமகவை மீட்க உச்சநீதிமன்றம் செல்லும் ராமதாஸ்: ஆலோசனை கூட்டத்தில் முடிவு

திண்டிவனம்: நவ. 17–

தேர்தல் ஆணையம் வாய் திறக்காததால் பாமகவை மீட்க உச்சநீதிமன்றம் செல்ல ராமதாஸ் தலைமையில் நடந்த ஆலோசனை கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. பாமகவில் தந்தை, மகன் அதிகார மோதலை தொடர்ந்து ராமதாஸ் தலைமையில் ஒரு அணியும், அன்புமணி தலைமையில் ஒரு அணியும் செயல்பட்டு வருகிறது. இரு அணியினரும் போட்டி கூட்டங்கள் நடத்தி ஆதரவாளர்களை திரட்டி வருகின்றனர். தங்களுக்கு தான் மாம்பழம் சின்னம் ஒதுக்க வேண்டும் என்று இரு அணியினரும் தனித்தனியாக தேர்தல் கமிஷனுக்கு மனு அளித்துள்ளனர்.

வரும் 2026 சட்டசபை தேர்தலை மனதில் வைத்து இருவரும் கட்சி நடவடிக்கைகளில் தீவிரம் காட்டி வருகின்றனர். இந்நிலையில், விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அடுத்த தைலாபுரம் தோட்டத்தில் நேற்று பாமக நிறுவனர் ராமதாஸ் தலைமையில் வழக்கறிஞர் சமூக நீதி பேரவை மாநில செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இதில் செயல் தலைவர் ஸ்ரீகாந்தி, தலைமை நிலைய செயலாளர் அன்பழகன், தலைமை நிர்வாக குழு உறுப்பினர் பரந்தமான், மாநில வழக்கறிஞர் சமூக நீதி பேரவை தலைவர் கோபு உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அப்போது முக்கிய நிர்வாகிகள் பேசும்போது, அன்புமணி ஆதரவாளர்கள், பாமகவினர் மீது தொடர் தாக்குதல் நடத்தி வருவதாக முறையிட்டனர். சில வாரங்களுக்கு முன்பு சேலத்தில் அருள் எம்எல்ஏ மீது நடந்த தாக்குதல் மட்டுமல்லாமல் மாநிலத்தில் பல்வேறு இடங்களில் பாமகவிரை அன்புமணி ஆதரவாளர்கள் தாக்கி வருவதாக புகார் தெரிவித்தனர்.

இதற்கு பதிலளித்து பேசிய ராமதாஸ், 'அன்புமணி ஆதரவாளர்கள் வன்முறையை கட்டவிழ்த்துவிட்டால் அதை சட்டரீதியாகத்தான் எதிர்கொள்ள வேண்டுமே தவிர, யாரும் திருப்பி தாக்கக் கூடாது.

அன்புமணி ஆதரவாளர் களால் பாமகவினர் தாக்குதலுக்கு உள்ளானால் சமூக நீதி பேரவையினர் அவர்களை உடனடியாக தொடர்பு கொண்டு சட்ட பாதுகாப்பு வழங்க வேண்டும். விரைவில் தேர்தல் வரவுள்ள நிலையில் நாம் பொறுமையாகவும், சாதுர்யமாகவும் இந்த பிரச்னையை கையாள வேண்டும்' என்றார். மேலும், ராமதாஸ் தலைமையிலான பாமகவை அங்கீகரிக்க தேர்தல் கமிஷனில் 2 முறை மனு அளித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லாததால் உச்சநீதிமன்றத்தை நாடுவது சம்பந்தமாக இக்கூட்டத்தில் ஆலோசித்து முடிவு எடுத்ததாக தெரிகிறது.

தொடர்ந்து திண்டிவனத்தில் உள்ள தனியார் மஹாலில் நாளை மறுதினம் பாமக, வன்னியர் சங்க மாவட்ட செயலாளர்கள், தலைவர்கள் கூட்டம் நடக்கிறது. 19ஆம் தேதி இளைஞர் சங்க மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது. இந்த கூட்டங்களில் கட்சியின் அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பாகவும், வரும் தேர்தலில் யாருடன் கூட்டணி என்பது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்தும் விவாதிக்கப்படும் என்றும் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களை சந்தித்த வழக்கறிஞர் சமூக நீதிப் பேரவை மாநில தலைவர் கோபு கூறுகையில், 'பீகார் தேர்தலில் போட்டியிடப் போவதாக தேர்தல் ஆணையத்தை அணுகி மாம்பழம் சின்னம் பெறப்பட்டுள்ளது. தனி நபர்களுக்கு சின்னம் கொடுக்கவில்லை. பாமகவுக்குதான் சின்னம் கொடுக்கப்பட்டது. பீகார் தேர்தலில் ஏன் போட்டியிடவில்லை என பாலுவிடம்தான் கேட்க வேண்டும்.

பாண்டிச்சேரியில் அங்கீகரிக்கப்பட்ட கட்சியாக பாமக உள்ளதால் அதனை குறிப்பிட்டு சின்னம் பெறப்பட்டுள்ளது. மாம்பழம் சின்னம் தொடர்பாக தேர்தல் ஆணையத்தை அணுகுவோம். தேர்தல் ஆணையம் சின்னத்தை ஒதுக்கவில்லை என்றால் உச்சநீதிமன்றத்தை அணுகுவோம். பாமக சட்டமன்ற உறுப்பினர் அருளை, பாலு குண்டர் என கூறுவதை வன்மையாக கண்டிக்கிறோம், என்றார்.

## சட்டமன்ற தேர்தலில் திமுக - காங்கிரஸ் கூட்டணி உறுதி: செல்வபெருந்தகை அறிக்கை",

சென்னை, நவ. 17–

தமிழகத்தில் திமுக கூட்டணியில் தொடர்வதை காங்கிரஸ் கட்சி மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. தவெக பக்கம் காங்கிரஸ் செல்லும் என கூறப்பட்ட நிலையில் திமுக கூட்டணியில் தொடர்வதாக செல்வபெருந்தகை விளக்கம் அளித்துள்ளார். இதுகுறித்து செல்வபெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில், \"பீகார் மாநிலத்தைப் போல தமிழ்நாட்டிலும் ஆட்சி மாற்றம் ஏற்படும் என்று சிலர் ஆரூடம் கூற ஆரம்பித்திருக்கிறார்கள். பீகார் மாநில தேர்தலை பொறுத்தவரை அங்கு வாக்காளர் பட்டியலில் நடைபெற்ற சிறப்பு தீவிர திருத்தத்தின் காரணமாக 65 லட்சம் வாக்குகள் நீக்கப்பட்டதை எதிர்த்து மக்களவை எதிர்கட்சித் தலைவர் ராகுல்காந்தி அவர்களும், ராஷ்டிரிய ஜனதா தள தலைவர் தேஜஸ்வி யாதவ் அவர்களும் இணைந்து 16 நாட்கள் பீகார் மாநிலத்தில் வாகன அணிவகுப்பு மூலமாக பரப்புரை மேற்கொண்டார்கள். இந்த பின்னணியில் பீகார் மாநிலத்தில் தொகுதி பங்கீடு செய்யப்பட்டு தேஜஸ்வி யாதவ் அவர்களை முதலமைச்சராக இந்தியா கூட்டணி சார்பாக அறிவிக்கப்பட்டது. தேர்தல் வெற்றி வாய்ப்புகள் நிச்சயமாக இந்தியா கூட்டணிக்கு சாதகமாக அமையும் என்று நாடே எதிர்பார்த்தது. ஆனால், தேர்தல் முடிவுகள் யாருமே எதிர்பார்க்காத வகையில் பா.ஜ.க. கூட்டணி வெற்றி பெற்றிருக்கிறது கடந்த 2005 முதல் 20 ஆண்டுகளாக முதலமைச்சராக இருக்கிற நிதிஷ்குமார் மீண்டும் வெற்றி பெறுவதற்கு நியாயமான காரணங்கள் எதுவும் இல்லாத நிலையில் பா.ஜ.க. கூட்டணியின் வெற்றி எப்படி சாத்தியமாயிற்று என்று அரசியல் வல்லுநர்கள் ஆய்வு செய்து வருகிறார்கள். பீகாரில் மொத்த மக்கள் தொகையில் 33.76 சதவிகிதம் பேர் வறுமை கோட்டிற்கு கீழே வாழ்ந்து வருகிறார்கள். பீகாரில் உள்ள குடும்பங்களில் 64 சதவிகிதம் பேர் மாதம் ரூபாய் பத்தாயிரத்திற்கும் குறைவாக வருவாய் பெற்றிருக்கிறார்கள். இந்தியாவிலேயே வேலையில்லா திண்டாட்டம் 10.8 சதவிகிதமாக பீகாரில் தலைவிரித்தாடி வருகிறது. ஏறத்தாழ 3 கோடி பேர் பீகாரில் இருந்து புலம் பெயர்ந்து தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங்களில் வேலை செய்து பிழைத்து வருகிறார்கள். இத்தகைய அவலநிலைக்கு பீகார் மாநிலத்தை கொண்டு சென்ற பா.ஜ.க. கூட்டணிக்கு மக்கள் வாக்களிக்க எந்தவித நியாயமான காரணங்கள் இல்லை என்று உறுதியாக கூற முடியும். ஆனால் வெற்றி வாய்ப்ப எப்படி ஏற்பட்டது ?இந்திய தேர்தல் ஆணையர்கள் நியமனத்திற்காக அமைக்கப்பட்ட தேடுதல் குழுவில் இருந்து 2023 இல் இந்திய தலைமை நீதிபதியை நீக்கி விட்டு பிரதமர், மத்திய அமைச்சர், எதிர்கட்சித் தலைவர் என்று மாற்றியமைத்தார்களோ அன்றைக்கே இந்திய தேர்தல் ஆணையம் மோடி அமித்ஷாவின் கூட்டணிக்குள் ஐக்கியமாகி விட்டது. இந்த பின்னணியில் தான் கடந்த காலங்களில் வாக்குத் திருட்டு மூலமாக மகாராஷ்டிரா, அரியானா போன்ற மாநிலங்களில் பா.ஜ.க. வெற்றிபெற்றது. அத்தகைய உத்தியை தான் பீகாரிலும் பின்பற்றி வெற்றி பெற்றிருக்கிறார்கள். பீகார் வெற்றி என்பது மோடி அமித்ஷா ஞானேஷ்குமார் கூட்டணியினால் விளைந்ததே தவிர, மக்கள் வாக்களித்து பா.ஜ.க. கூட்டணி வெற்றி பெறவில்லை. பீகார் சட்டமன்றத் தேர்தல் அக்டோபர் 6 ஆம் தேதி அறிவிப்பதற்கு முன்பாக செப்டம்பர் மாதத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருக்கும் போது 1.21 கோடி பெண்களுக்கு தலா ரூபாய் 10,000 விநியோகம் செய்யப்பட்டது. இதை எதிர்த்து தேர்தல் ஆணையத்திடம் முறையிட்ட போது, அதனை தடுத்து நிறுத்த மறுத்து விட்டது. ஆனால், தெலுங்கானா, ஜார்கண்ட் மாநிலத்தில் இத்தகைய திட்டங்களை தேர்தல் ஆணையம் அனுமதிக்கவில்லை. பெண்களுக்கு வழங்கப்பட்ட ரூபாய் 10,000 வாக்குகளுக்காக கொடுக்கப்பட்டது லஞ்ச பணமாகத் தான் கருத வேண்டும். இது வெற்றிக்கான மிக முக்கிய காரணமாகும். நடைபெற்ற பீகார் சட்டமன்றத் தேர்தலில் 20.6 சதவிகித வாக்குகளை பெற்று 89 இடங்களில் பா.ஜ.க.வும், 20.3 சதவிகித வாக்குகளை பெற்று 85 இடங்களில் ஐக்கிய ஜனதா தளமும் வெற்றி பெற்றது. ஆனால், 23 சதவிகித வாக்குகளை பெற்ற ராஷ்டிரிய ஜனதா தளம் 25 இடங்களில் மட்டுமே வெற்றி பெற முடிந்தது. இன்றைக்கும் தனிப்பெரும் கட்சியாக ராஷ்டிரிய ஜனதா தளம் விளங்கினாலும் 2020 சட்டமன்றத் தேர்தலில் 15.39 சதவிகித வாக்குகளை பெற்று 43 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றிருந்த ஐக்கிய ஜனதா தளம் தற்போது 85 இடங்களில் எப்படி வெற்றி பெற முடிந்தது என்பது கடுமையான சந்தேகத்திற்கு உரியதாகும். இதில் தேர்தல் ஆணையத்தின் சதி இருப்பதை அனைவரும் உறுதி செய்கிறார்கள். தமிழ்நாட்டில் தி.மு.க. தலைமையில் காங்கிரஸ் உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கடந்த 2019 மக்களவை தேர்தல், 2021 சட்டமன்றத் தேர்தல், 2024 மக்களவை தேர்தல் ஆகியவற்றில் அமோக வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளது. தமிழகத்தை பொறுத்தவரை மதச்சார்பின்மை, சமூகநீதி ஆகிய கொள்கைகளுக்காகவும், தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்கிற நோக்கத்திலும் இந்தியா கூட்டணி வெற்றிக் கூட்டணியாக செயல்பட்டு வருகிறது. ஒன்றிய பா.ஜ.க. அரசின் தமிழக விரோத போக்கிற்கு எதிராக மக்கள் ஓரணியில் திரண்டு இந்தியா கூட்டணிக்கு ஆதரவாக அணிவகுத்து நிற்கிறார்கள். எக்கு கோட்டை போல இருக்கிற இந்தியா கூட்டணிக்கு எதிரான வாக்குகளை அதி.மு.க., பா.ஜ.க. கூட்டணி, தமிழக வெற்றி கழகம், நாம் தமிழர் கட்சி பங்கு போட்டுக் கொள்கிற சூழல் தான் 2026 சட்டமன்றத் தேர்தலில் இருக்கப் போகிறது. இதன் அடிப்படையில் இந்தியா கூட்டணி தமிழகத்தில் மீண்டும் வெற்றி பெற்று நல்லாட்சி அமைவதை எந்த சக்தியாலும் தடுக்க முடியாது\" என்று தெரிவித்துள்ளார்.

# புதுச்சேரியில் சாலையோரங்களில் வாகனங்கள் நிறுத்துவதற்கு தடை விதிக்க உழவர்கரை நகராட்சிக்கு மீனாட்சி கணேஷ் இயக்கம் கோரிக்கை

புதுச்சேரி, நவ. 17–

இது தொடர்பாக மீனாட்சி கணேஷ் பொது சேவை இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது

உழவர்கரை நகராட்சி ஆணையர் சுரேஷ்ராஜ் மக்கள் நலன் கருதி பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார். குறிப்பாக சாவு ஊர்வலத்தில் மாலைகளை சாலைகளில் வீசக்கூடாது என்ற உத்தரவு மிகுந்த வரவேற்பிற்குரியது. இதனால் பல விபத்துக்கள் தடுக்கப்பட்டு வருகிறது. மேலும் மக்களுக்கான அசவுகரியங்களும் தடுக்கப்பட்டு வருகிறது.



இதன் காரணமாக சாவு ஊர்வலங்கள் போக்குவரத்து அதிகமுள்ள நகர்ப்புற சாலைகளில் செல்லும்போது மாலைகளை வீசாததன் காரணமாக வேகமாகவும் செல்கிறது. இதனால் போக்குவரத்து நெரிசலும் குறைந்துள்ளது என்றும் கூறலாம்.

அந்தவகையில் முதலியார்பேட்டை அரும்பார்த்தபுரம் சாலையில் குப்பைகள் கொட்டினால் அபராதம் வசூலிக்கப்படும். குப்பை கொட்டும் வாகனங்களை புகைப்படம் எடுத்து அனுப்புபவர்களுக்கு ரூ.2 ஆயிரம் சன்மானம் அளிக்கப்படும் என்ற உத்தரவும் வரவேற்புக்கு உரியது. இதன் மூலம் அந்த சாலையில் குப்பைகள் கொட்டுவது முற்றிலும் தடுக்கப்படும்.

அதுபோல் பல வாகனங்கள் நகராட்சிக்கு சொந்தமன சாலையில் நீண்ட நாட்கள் நிறுத் தப்பட்டு போக்குவரத்து நெரிசலுக்கு முக்கிய காரணமாக இருந்து வருகிறது, இந்த வாகனங்களை உடனடியாக அப்புறப்படுத்தவும், வாகனங்களை அதற்கான இடங்களில் நிறுத்தவும் உத்தரவு பிறப்பிக்க வேண்டும். முக்கிய சாலைகளில் சரக்குகள் இறக்குவதற்காக மட்டும் கனரக வாகனங்கள் உள்ளிட்ட வாகனங்கள் நிறுத்த அனுமதிக்கப்பட வேண்டும். அதுவும்கூட அதிக பட்சமாக அரை மணிநேரம் மட்டுமே சரக்குகள் இறக்க அனுமதிக்கப்பட வேண்டும். அந்த நேரத்தை தாண்டி நிறுத்தப்படும் வாகனங்களுக்கு அபராதம் அல்லது கட்டணம் வசூலிக்க வேண்டும்.

இந்த உத்தரவு போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதை தடுப்பதுடன், சமூக விரோத செயல்களையும் தடுக்கும். எனவே உழவர்கரை நகராட்சி ஆணையர் முதல் கட்டமாக உழவர்கரை நகராட்சிக்கு சொந்தமான சாலைகளில் வாகனங்கள் நிறுத்துவதற்கு தடை உத்தரவு பிறப்பித்து, அதனை உடனடியாக அமலுக்கு கொண்டு வர வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா சேலம் பிராந்தியம், MSME (சிறு, குறு, மற்றும் நடுத்தர நிறுவனம்) மெகா அவுட்ரீச் முகாமை 15.11.2025 அன்று நடத்தியது. இதில் சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் Dr. பிருந்தா தேவி அவர்கள் கலந்துகொண்டு 173 பயனாளிகளுக்கு ரூபாய் 148.00 கோடிக்காக கடன் ஒப்புதல் கடிதத்தை கொடுத்தார். அவர் பேசுகையில் மாவட்ட நிர்வாகமும் வங்கிகளும் இணைந்து செயல்பட்டு அரசாங்கத்தினுடைய திட்டங்கள் இன்னும் முழுமையாக மக்களை சென்றடைய செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். யூனியன் பாங்க் ஆப் இந்தியாவின் சேலம் பிராந்தியத்தின் தலைவர் திரு. பி. எம். செந்தில்குமார் அவர்கள் வங்கியினுடைய பல்வேறு திட்டங்களை குறித்து எடுத்துரைத்து யூனியன் வங்கி இந்த சேலம் பிராந்தியத்தில் வாடிக்கையாளர்களுக்கு எவ்வாறு சேவை செய்து வருகிறது என்பதை விரிவாக எடுத்துக் கூறினார். மாவட்ட தொழில் மையத்தின் பொது மேலாளர் திரு. சிவகுமார் அவர்கள் வங்கிகளில் மானியத்துடன் கூடியதான கடனை எவ்வாறு பெறுவது என்று விளக்கி கூறினார்கள். தொடர்ந்து சேலம் வர்த்தக சபையின் நிர்வாகி கார்த்திக் கந்தப்பன், சேலம் குரு சிறு மற்றும் தொழில்கள் சங்கத்தின் தலைவர் மாரியப்பன், மாவட்ட முன்னோடி வங்கியின் மேலாளர் திரு செந்தில்குமார் அவர்கள் பேசினார்கள். இந்த முகாமில் சேலம், கிருஷ்ணகிரி, தர்மபுரி மற்றும் நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த சுமார் 400க்கும் அதிகமானோர் பங்கு பெற்று பயன் பெற்றார்கள். முன்னதாக MSME கடன் மையத்தின் தலைவர் திரு. தனசேகர் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். முடிவில் தனிநபர் கடன் பிரிவின் தலைவர் தவக்குமார் அவர்கள் நன்றி கூறினார்கள்.

# கிழவம் பூண்டி கிராமத்தில் ஐயப்ப பக்தர்கள் சார்பில் சாஸ்தா பூஜை



மேல்மலையனூர் நவ 17:

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் தாலுக்கா கிழவம் பூண்டி கிராமத்தில் ஐயப்ப பக்தர்கள் சார்பில் சாஸ்தா பூஜை வெகு விமர்சியாக நடைபெற்றது.

இதில் பல மலர்களால் அலங்கரிக்கப்பட் அலங்கார வீட்டில் ஐயப்பன் படம் வைத்து தீபாரதனை காண்பிக்கப்பட்டு சாஸ்தா பூஜை ஆரம்பிக்கப்பட்டது

இதில் குருசாமி மற்றும் பக்தர்கள் பக்தி பாடல் பாடி வழிபட்டனர்.

தொடர்ந்து உற்சவர் சிலைக்கு பால் தேன் பஞ்சாமிர்தம் நெய் போன்ற வசனை திரவியங்கள் மற்றும் சொர்ண அபிஷேகம் செய்யப்பட்டது தொடர்ந்து உற்சவர் மற்றும் 18 ஆம் படி பல மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு 18 ஆம் படி பூஜை நடைபெற்றுது. இதில் 18 படிக்கும் மெய் விளக்கு ஏற்றி கற்பூர மேற்றி பழி பூஜை செய்தனர்.

கருப்பசாமி வேடமிட்டு பஜனையில் கருப்பசாமி பாடல் பாடினர் கருப்பசாமி வேடமிட்டவர் நடனமாடி பக்தர்களுக்கு பரவசத்தை ஏற்படுத்தினார்.

பக்தர்கள் சாமியே சரணம் ஐயப்பா என்று கோஷமிட்டனர். பெண்கள் வீடுகளில் இருந்து காமாட்சி அம்மன் விளக்கு எடுத்து வந்து பூஜையில் வைத்து வீடுகளுக்கு எடுத்து சென்றனர் இந்த சாஸ்தா பூஜையில் சுற்றுவட்டார கிராமத்தில் இருந்து ஏராளமான ஐயப்ப பக்தர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து பக்தர்களுக்கு அன்ன தானம் வழங்கப்பட்டது.

# தேசிய பத்திரிகை தினத்தை முன்னிட்டு பத்திரிகையாளர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

சென்னை: நவ.17–

'எந்தவொரு ஜனநாயகத்திலும், அதிகாரத்தில் இருப்பவர்களால் நிறுவனங்கள் வளைக்கப்படலாம் அல்லது கைப்பற்றப்படலாம், ஆனால் பத்திரிகைகள் ஜனநாயகத்தை உயிர்ப்புடன் வைத்திருக்கும் சக்தியாக இருக்க வேண்டும்' என தேசிய பத்திரிகை தினத்தை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 16 ஆம் தேதி தேசிய பத்திரிகை தினமாக அனுசரிக்கப்படுகிறது. ஒரு ஜனநாயக நாட்டில் ஊடகங்களின் அத்தியாவசியப் பங்கையும், பொறுப்பான பத்திரிகைத் துறையின் தேவையையும் வலியுறுத்துவதே இந்த நாளின் நோக்கமாகும்.

ஜனநாயகத்தின் நான்காவது தூண் எனப் போற்றப்படும் பத்திரிகைகள், நாட்டின் அனைத்துத் துறைகளிலும் நடக்கும் நிகழ்வுகளை மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டி, விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றன.

இந்த நாளில், பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கும், பத்திரிகைத் தரத்தை மேம்படுத்துவதற்கும், போலிச் செய்திகளுக்கு எதிராகப் போராடுவதற்கும் பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகங்களின் பொறுப்பு குறித்து கவனம் செலுத்தப்படுகிறது.

இந்நிலையில் தேசிய பத்திரிகை தினத்தை முன்னிட்டு பத்திரிகையாளர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளதாவது; "எந்தவொரு ஜனநாயகத்திலும், அதிகாரத்தில் இருப்பவர்களால் நிறுவனங்கள் வளைக்கப்படலாம் அல்லது கைப்பற்றப்படலாம், ஆனால் பத்திரிகைகள் ஜனநாயகத்தை உயிர்ப்புடன் வைத்திருக்கும் சக்தியாக இருக்க வேண்டும்.

தேசிய பத்திரிகை தினத்தன்று, மத்திய பாஜக அரசின் சர்வாதிகாரத்திற்கு அடிபணிய மறுத்து, அதன் தோல்விகள், அதன் ஊழல் செயல்கள் மற்றும் அதன் வஞ்சகத்தை துணிச்சலுடன் வெளிப்படுத்தும் ஒவ்வொரு பத்திரிகையாளரையும் நான் பாராட்டுகிறேன்" என பதிவிட்டுள்ளார்.

## கனமழை எச்சரிக்கை காரணமாக மறு அறிவிப்பு வரும் வரை காரைக்கால் மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என புதுச்சேரி அரசு அறிவிப்பு

கனமழை எச்சரிக்கை காரணமாக மறு அறிவிப்பு வரும் வரை காரைக்கால் மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என புதுச்சேரி அரசு அறிவித்துள்ளது. இதுகுறித்து மேலும் வெளியான அறிக்கையில்; "சென்னை மண்டல வானிலை ஆய்வு நிலையத்தின் 16112025 நாளிட்ட அறிக்கையின்படி, இலங்கைக்கு தென்மேற்கே வங்ககடலில் குறைந்த காற்றழுத்த பகுதியானது நேற்றய தினத்தில் 1730 மிஷிஜி இருந்து நிலவி வருகிறது. அதனுடன் தொடர்புடைய மேல் வளிமண்டல சுழற்சி கடல் மட்டத்திலிருந்து 5.8 கி.மீ. உயரம் வரை தென்மேற்கு திசை நோக்கி சாய்ந்த நிலையில் பரவியுள்ளது. அடுத்த 24 மணி நேரத்தில் இது மெதுவாக மேற்கு வடமேற்கு திசை நோக்கி நகரும் வாய்ப்பு உள்ளது.

இதன் காரணமாக காரைக்கால் மாவட்டத்தில் உள்ள மீன்பிடி விசைப்படகு மற்றும் நாட்டுப்படகு மீனவர்கள் 16112025 முதல் மறு அறிவிப்பு வரும் வரை கடலில் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், கடலில் மீன்பிடித்து கொண்டிருக்கும் மீனவர்கள் உடனடியாக கரைக்கு திரும்புமாறும் அறிவுறுத்தப்படுகிறார்கள். எனவே, மீனவ கிராம பஞ்சாயத்தார்கள் தங்கள் கிராமங்களில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ள உரிமையாளர்களுக்கு தகவல் தெரியும் பொருட்டு இதனை உரிய வகையில் அறிவிப்பு செய்திடக் கேட்டுக்கொள்ளப்படுகிறது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜெருசலேம் புனித பயணம் மேற்கொண்டு திரும்பிய கிறிஸ்தவர்கள் மானியம் பெற விண்ணப்பிக்கலாம்: தமிழக அரசு அறிவிப்பு

சென்னை: நவ.17–

தமிழ்நாட்டை சார்ந்த அனைத்து பிரிவினரையும் உள்ளடக்கிய 600 கிறிஸ்தவர்கள் பயனடையும் வகையில் ஜெருலேம் புனித பயணம் மேற்கொண்டு திரும்பிய 550 கிறிஸ்தவர்களுக்கு நபர் ஒருவருக்கு ரூ.37,000 வீதமும், 50 கன்னியாஸ்திரிகள், அருட்சகோதரிகளுக்கு நபர் ஒருவருக்கு ரூ.60,000 வீதமும் ECS முறையில் நேரடியாக மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் 1.11.2025க்கு பிறகு ஜெருசலேம் புனித பயணம் மேற்கொண்ட கிறிஸ்தவ மத பயனாளிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

இதற்கான விண்ணப்ப படிவத்தினை மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் இயங்கும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் / சிறுபான்மையினர் நல அலுவலகங்களில் இருந்து கட்டணமின்றி பெறலாம். www.bcmbcmw.tn.gov.in என்ற இணையதளத்தில் இருந்தும் பதிவிறக்கலாம். உரிய ஆவணங்களுடன் ஆணையர், சிறுபான்மையினர் நலத்துறை, கலசமஹால் பாரம்பரிய கட்டடம், முதல் தளம். சேப்பாக்கம், சென்னை600 005 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களை 28.02.2026 அனுப்ப வேண்டும் என சிறுபான்மையினர் நலத்துறை ஆணையர் தெரிவித்துள்ளார்.

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...

# 76 வது அரசியலமைப்பு தினத்தை முன்னிட்டு திருப்பூரில் கே.எம்.சி சட்டக் கல்லூரி மாணவர்களின் விழிப்புணர்வு பேரணி




திருப்பூர், நவ. 17–

76வது இந்திய அரசியலமைப்பு தினத்தை கொண்டாடும் வகையில், திருப்பூரில் உள்ள கே.எம்.சி சட்டக் கல்லூரி அரசியலமைப்பு தின விழா மற்றும் விழிப்புணர்வு மாணவ பேரணியை நடத்தியது. வரலாற்று சிறப்புமிக்க தியாகி திருப்பூர் குமரன் நினைவு மண்டபத்தில் தொடங்கிய விழிப்புணர்வு பேரணியை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி N சதீஷ்குமார் கொடியசைத்து துவக்கி வைத்தார். தொடர்ந்து நடைபெற்ற பேரணியில் 300க்கும் மேற்பட்ட சட்டக் கல்லூரி மாணவ மாணவிகள் விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தியும் கோஷங்களை எழுப்பியும் முக்கிய சாலைகளின் வழியாக சென்று திருப்பூர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் கருணாநிதி பேருந்து நிலையம் வரை ஊர்வலமாக சென்றனர். பேரணி சீரான முறையில் அமைதியாக நடந்து முடிந்தது. ரிவிசி சட்டக் கல்லூரியின் தாளாளர் மற்றும் தனியார் சட்டக் கல்லூரி கூட்டமைப்பின் துணை தலைவருமான அருணா ஸ்ரீதேவி, கே.எம்.சி வள்ளியம்மை கல்வி அறக்கட்டளையின் தலைவி லோகநாயகி, KMC சட்டக்கல்லூரியின் முதல்வர் எம்.எஸ். சௌந்தரபாண்டியன், செயலாளர் ஞான வர்ஷினி, செயல் அலுவலர் சசிகாந்த் பங்கேற்றனர்.

பேரணியின் தொடர்ச்சியாக, கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற விழாவில் முதல்வர் எம்.எஸ். சௌந்தர பாண்டியன் அவர்கள் வரவேற்புரையாற்றி அனைவரையும் வரவேற்றார்.

அரசியலமைப்பு தின உரையில், உயர்நீதிமன்ற நீதிபதி N. சதீஷ்குமார், நீதி, சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட இந்திய அரசியலமைப்பை எடுத்துரைத்து, உரிமைகள் மற்றும் கடமைகளுக்கு இடையிலான சமநிலையை வலியுறுத்தினார். சரத்து 32 ஐ அரசியலமைப்பின் "இதயம் மற்றும் ஆன்மா" என்று அழைத்தார். சேகூர் யானை வழித்தட தீர்ப்பை மேற்கோள் காட்டி, அரசியலமைப்பு சரத்து 51A(g) இன் கீழ் நீதிமன்றம் தன் அணுகு முறையை சுற்றுச்சூழல் பாதுகாப்பை நோக்கி செல்வதை கோடிட்டுக் காட்டினார். அரசியலமைப்பை ஒரு உயிருள்ள ஆவணமாகக் கருதி சட்ட மாணவர்கள் தங்கள் வாழ்வில் அரசியலமைப்பு மதிப்பீடுகளை பின்பற்றுமாறு வலியுறுத்தினார். அரசியலமைப்பு தின விழா போட்டிகளாக வினாடி வினா மற்றும் விவாதப் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. கலை நிகழ்ச்சிகளுடன் இனிதே விழா நிறைவடைந்தது.

# கோவை இடிகரை பகுதியில் நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்!!



கோவை நவ:17

கோவை மாவட்டம் இடிகரை அரசு உயர்நிலைப் பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் உயர் சிறப்பு மருத்துவ முகாம் இன்று நடைபெற்றது.

கோவை வடக்கு மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் அ. ரவி குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். உடன் மாவட்ட சுகாதார அலுவலர் டாக்டர் பி .பாலுசாமி, ஜனார்த்தன், பேரூராட்சியின் செயலாளர்கள் பேரூராட்சியின் அரசு அதிகாரிகள், தூய்மை பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

உடன் இருந்தனர். மருந்து பெட்டகங்கள், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்ட அடையாள அட்டை, மாற்றுத் திறனாளிகளுக்கான அடையாள அட்டை, அமைப்பு சாரா தொழிலாளருக்கான அடையாள அட்டை வழங்கினார்.

இந்த மருத்துவ முகாமில் கண் சிகிச்சை, பல் சிகிச்சை, காது மூக்கு தொண்டை, பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, சர்க்கரை நோய், இருதய நோய், நுரையீரல் மருத்துவம், எலும்பு மருத்துவம்,

உணவு பாதுகாப்பு துறை போன்ற பல்வேறு மருத்துவத்துறைகள் இடம் பெற்றன. இதில் பொதுமக்களுக்கு தேவையான துறைகளை தேர்ந்தெடுத்து பயன்படுத்திக் கொண்டனர்.

# மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டி மற்றும் சட்ட விழிப்புணர்வு



வந்தவாசி, நவ 17:

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி அடுத்த தேசூர் அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு உயர்கல்வி மற்றும் சட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு பொறுப்பு தலைமை ஆசிரியர் செந்தில்குமார் தலைமை தாங்கினார். சிறப்பு அழைப்பாளராக, ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் நாயகன் பங்கேற்று கருத்துரைகளை வழங்கினார். மேலும் குண்ணகம்பூண்டி அரசு பள்ளி கணினி ஆசிரியர் பா.சுரேஷ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மேலும் சென்னை உயர் நீதிமன்றம் இளம் வழக்கறிஞர் பல்லாவரம் ந.கமலநாதன் மாணவர்களுக்கு சட்ட விழிப்புணர்வு தகவல்களை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றனர்.

# சேலம் மாவட்டம், ஆத்தூர் மற்றும் ஏற்காடு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, நேரில் ஆய்வு




சேலம். நவ. 17–

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான கணக்கீட்டு படிவம் பூர்த்தி செய்யப்பட்டதை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் பெறப்பட்டு வரும் பணிகளை சேலம் மாவட்டம், ஆத்தூர் மற்றும் ஏற்காடு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (16.11.2025) நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள். ஆய்விற்கு பின் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது :

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரதிருத்த பணிகள் 2026 அக்டோபர் மாதம் 28 ம் தேதி முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில் கணக்கெடுப்பு பணிகள் சேலம் மாவட்டத்தில் 04.11.2025 அன்று முதல் டிசம்பர் 4 ம் தேதி வரையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் இன்றைய தினம் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான கணக்கீட்டு படிவம் வழங்கப்பட்டு வாக்காளர்களிடம் பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் பெறப்பட்டு வருகிறது. இந்திய தேர்தல் ஆணையத்தால் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை முறையாக பின்பற்றிட வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது.

மேலும், தொடர்புடைய வாக்குச்சாவடிக்கு உட்பட்ட வாக்காளர்களில் நிரந்தரமாக குடிபெயர்ந்த வாக்காளர்கள், இறந்து போன வாக்காளர்களின் விவரங்களை அறிந்து கொண்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், வாக்காளர்களிடமிருந்து பூர்த்தி செய்த கணக்கீட்டுப் படிவங்களை பெற வரும் தேதியினை முன்கூட்டியே வாக்காளர்களுக்கு தெரியப்படுத்தி அனைத்து வாக்காளர்களிடமிருந்தும் கணக்கீட்டுப் படிவங்கள் பெறுவதை உறுதி செய்திடவும் இந்த ஆய்வின் போது அறிவுறுத்தப்பட்டது.

சேலம் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆத்தூர் வட்டம், கொத்தம்பாடி பகுதியிலும் மற்றும் ஏற்காடு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாழப்பாடி வட்டம், முத்தம்பட்டி பகுதியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான கணக்கீட்டு படிவம் பூர்த்தி செய்யப்பட்டதை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் பெறப்பட்டு வரும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

# சேலம் மேற்கு, வீரபாண்டி சட்டமன்ற தொகுதி திமுக நிர்வாகிகளுடன் முதல்வர் சந்திப்பு: பேரவை தேர்தல் குறித்து அறிவுரை



திமுக தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை அண்ணா அறிவாலயத்தில், “உடன்பிறப்பே வா” என்ற தலைப்பில் சட்டமன்ற தொகுதி வாரியாக பகுதிநகரஒன்றியபேரூர் திமுக செயலாளர்களை ஒவ்வொருவரையும் தனித்தனியாக கடந்த ஜூன் 13ம் தேதி முதல் சந்தித்து வருகிறார். திமுக நிர்வாகிகள் ‘ஒன் டூ ஒன்’ஆக தலைவர் மு.க.ஸ்டாலினை சந்தித்து தங்கள் மனதில் உள்ளதை தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், நேற்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் சேலம் மாவட்டம் சேலம் மேற்கு சட்டமன்ற தொகுதி,வீரபாண்டி சட்டமன்ற தொகுதி நிர்வாகிகளை முதல்வர் தனித்தனியே சந்தித்து பேசினார். அப்போது சட்டசபை தேர்தலை எதிர்கொள்வதற்கான முன்னேற்பாடுகள், தொகுதி வெற்றி நிலவரம் குறித்து கேட்டறிந்தார். சட்டப்பேரவை தேர்தலுக்கு இன்னும் குறுகிய மாதமே உள்ளதால் தேர்தல் பணிகளில் முழுவீச்சில் ஈடுபட வேண்டும்.

திமுக மற்றும் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்கள் வெற்றிக்காக உழைக்க வேண்டும். வரும் சட்டசபை தேர்தலில் 200க்கும் அதிகமான தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும் என்பது நமது இலக்கு. அந்த இலக்கை எட்ட அனைவரும் உறுதியோடு பணியாற்ற வேண்டும் என்றும் கேட்டு கொண்டார். மேலும் நிர்வாகிகளுக்கு புத்தகங்களை வழங்கினார்.

# ஆட்டோ, டாக்சி கட்டணத்தை உயர்த்த வேண்டும்: அன்புமணி கோரிக்கை

சென்னை: நவ.17–

மக்களை பாதிக்காத வகையில் ஆட்டோ, டாக்சி கட்டணத்தை உயர்த்த வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி கோரிக்கை வைத்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: சென்னை உள்ளிட்ட தமிழ்நாட்டில் நகரப்பகுதிகளில் இயக்கப்படும் ஆட்டோக்கள் மற்றும் டாக்சிகள் உள்ளிட்ட வாடகை ஊர்திகளுக்கான கட்டணம் 13 ஆண்டாக உயர்த்தப்படவில்லை. எனவே மக்களை பாதிக்காத வகையில் ஆட்டோ மற்றும் டாக்சி கட்டணத்தை உயர்த்த வேண்டும்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கோவை கோயாஸ் வெள்ளி நகை விற்பனை மையம் துவக்க விழா!!



கோவை நவ:17

கோவை ஆர் எஸ் புரம் பகுதியில் கோயாஸ் எனும் வெள்ளி நகை விற்பனை மையம் துவக்க விழா நடைபெற்றது.

அதில் பிரபல நடிகையும் ஆண்ட்ரியா பங்கேற்று நகைக்கடையை திறந்து வைத்து அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த ஆபரணங்களை பார்வையிட்டார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர்,தனக்கு மிகவும் பிடித்த ஊர் கோயம்புத்தூர் என்றும் ஆண்டுக்கு பத்து முறை கோவைக்கு வந்து செல்லும் எனக்கு கோயம்புத்தூர் வந்தாலே மிகுந்த சந்தோஷம் என்றும் கூறினார்.

தற்போது தங்கம் விலையைப் பார்த்தாலே பயமாக இருக்கிறது என கூறிய அவர்,நவம்பர் 21ஆம் தேதி தான் நடித்த மாஸ்க் திரைப்படம் வெளியாக உள்ளது படம் நன்றாக வந்துள்ளது ஜாலியான படம் என்பதால் அனைவரும் திரையரங்கில் வந்து படத்தை பாருங்கள் என வலியுறுத்தினார்.

தவெக தலைவர் நடிகர் விஜய் குறித்த கேள்விக்கு நடிகர் விஜய் வந்தாலும் மகிழ்ச்சி தான் என்றும் அவர் தளபதி தானே என்றும் பதிலளித்தார்.தொடர்ந்து கடைக்கு வெளியே ரசிகர்களை சந்தித்த பேசிய ஆண்ட்ரியா பின்னர் ரசிகர்களின் கோரிக்கைக்கு இணங்க பாடல் பாடி அனைவரையும் மகிழ்வித்தார்..

# இலவச மருத்துவ முகாம்.




திண்டுக்கல், நவ. 17

திண்டுக்கல் மாவட்டம் வடமதுரை ரயில் நிலையம் செல்லும் சாலையில் தனியார் பள்ளியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் முன்னாள் துணை சபாநாயகர் பாலசுப்பிரமணியன் நினைவு மருத்துவமனை மற்றும் VPB நினைவு அறக்கட்டளை வாராகி கிட்னி சென்டர் இணைந்து நடத்திய சிறுநீரகம் சார்ந்த நோய்களுக்கான இலவச மருத்துவ முகாம், நேற்று காலை இளைஞர் பாசறை மற்றும் இளம் பெண்கள் பாசறை மாநிலச் செயலாளர் டாக்டர் பரமசிவம் தலைமையில் முன்னாள் வனத்துறை அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் முகாமை துவக்கி வைத்தார், விழாவில் திண்டுக்கல் மாநகராட்சி முதல் மேயர் மருதராஜ், எம்ஜிஆர் மன்ற செயலாளர் தென்னம்பட்டி பழனிச்சாமி, ஜி சி ராஜமோகன், ஒன்றிய செயலாளர் லட்சுமணன், தண்டாயுதம், நகர செயலாளர் வடமதுரை PTR பாலசுப்பிரமணி, அய்யலூர் நகர செயலாளர் ராகுல்பாபா, மற்றும் வேடசந்தூர் எரியோடு பாளையம் குஜிலியம்பாறை அய்யலூர் ஒன்றிய நகர கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர் விழாவிற்கு வடமதுரை மற்றும் அய்யலூர் சுற்றியுள்ள பகுதிகளில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு ரத்த அழுத்தம் மற்றும் சிறுநீரக பாதிப்பு சிறுநீரக கல் கட்டிகள் பாதிப்பு உள்ளவர்கள் சர்க்கரை நோய் மற்றும் மலட்டு தன்மை ரத்த பரிசோதனை போன்ற பரிசோதனைகளை இலவசமாக செய்து கொண்டனர் விழாவில் சிறந்த மருத்துவர்களை கொண்டு திண்டுக்கல் பகுதியைச்சேர்ந்த டாக்டர் கதிர்செல்வன், டாக்டர் நாகரத்தினம், டாக்டர் சித்தார்த், டாக்டர் வி பி பி பரமசிவம், மருத்துவர்கள் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தி பெரியோர்கள் முதல் சிறியவர்கள் வரையிலான மருத்துவ சிகிச்சைகளை இலவச மாக அளித்தனர் இதனால் கிராமப்புறத் தைச் சேர்ந்த ஏராளமான கலந்து கொண்டு தங்கள் நோய்களுக்கு உண்டான மருந்து மாத்திரைகளை பெற்றுக்கொண்டு இலவச பரிசோதனை களை செய்து கொண்டனர்.

# கோவைக்கு 19ம்தேதி வரும் பிரதமர் மோடிக்கு எதிராக கருப்புக்கொடி போராட்டம்: விவசாயிகள் சங்கம் அறிவிப்பு

திருச்சி: நவ.17–

கோவைக்கு 19ம் தேதி வருகை தரும் பிரதமர் மோடிக்கு எதிராக கருப்புக்கொடி காட்டும் போராட்டத்தில் ஈடுபட உள்ளதாகவும், தொடர்ந்து டெல்லியில் காலவரையற்ற போராட்டம் நடத்த உள்ளதாகவும் விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் தெரிவித்தனர். தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்க மாநில தலைவர் அய்யாக்கண்ணு, விவசாய சங்க தலைவர் நாகை காவிரி தனபாலன், தமிழ்நாடு கள் இயக்க தலைவர் நல்லசாமி ஆகியோர் கூட்டாக நேற்று திருச்சியில் நிருபர்களிடம் கூறியதாவது:

கர்நாடகாவில் இருந்து காவிரியில் தினமும் தண்ணீர் திறக்க வேண்டும். மேகதாதுவில் அணை கட்டுவதை தடுத்து நிறுத்த வேண்டும். மரபணு திருத்தப்பட்ட பயிர்களை ஊக்குவிப்பதற்கு ரூ.500 கோடி நிதி ஒதுக்கீடு செய்ததற்கு கண்டனம் தெரிவிப்பது உள்ளிட்ட 6 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கோவைக்கு 19ம்தேதி வருகை தரும் பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிராக கருப்பு கொடி காட்டும் போராட்டம் நடத்தவுள்ளோம்.

விவசாய விளைபொருட்களுக்கு லாபகரமான விலை கிடைக்க வேண்டும். விவசாய கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும். தனிநபர் இன்சூரன்ஸ் காப்பீட்டு திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் நடத்த திருச்சியில் இருந்து நூற்றுக்கணக்கான விவசாயிகள் டெல்லி செல்ல உள்ளோம். டெல்லியில் கோரிக்கைகளை வலியுறுத்தி காலவரையற்ற போராட்டம் நடத்துவோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற 58வது தேசிய நூலக வாரவிழாவில நவீன நூலக நூலகருக்கு நூலகத்தில் அதிக புரவலர் மற்றும் உறுப்பினர்கள் சேர்த்ததற்காக கேடயம் மற்றும் பாராட்டுச்சான்றிதழ வழங்கினார் உடன் மாவட்ட நூலக அலுவலர் சாமிநாதன் உட்பட பலர் உள்ளனர்.

# ஈரோடு சோலார் பேருந்து நிலையத்தில் அதிகாரிகள் ஆய்வு



ஈரோடு சோலார் பகுதியில் புதியதாக அமைக்கப்பட்டு வரும் பேருந்து நிலையத்தின் கட்டுமான பணிகள் குறித்து நகராட்சி நிர்வாக இயக்குனர் மதுசூதனன் ரெட்டி நேரில் சென்று ஆய்வு செய்தார். அவருடன் ஈரோடு மாவட்ட ஆட்சியர் ச. கந்தசாமி, ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், உதவி ஆட்சியர் ( பயிற்சி) காஞ்சன் சௌத்ரி, மாநகராட்சி உதவி ஆணையாளர் தனலட்சுமி , மாநகராட்சி தலைமை பொறியாளர் கோ. முருகேசன் உள்பட துறை சார்ந்த அதிகாரிகள் இந்த ஆய்வின்போது உடன் இருந்தனர்.

# கரூரில் த.வெ.க. போராட்டத்துக்கு போலீசார் விதித்த 6 நிபந்தனைகள்” ,

“கரூரில் த.வெ.க. சார்பில் தேர்தல் ஆணையத்தால் நடைபெற்று வருகிற சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு குளறுபடிகளை கண்டித்து கரூர் தலைமை தபால் நிலையம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளது. இதற்காக கரூர் மேற்கு மாவட்ட செயலாளர் வி.பி.மதியழகன் போலீஸ் அனுமதி கேட்டு கரூர் டவுன் போலீஸ் நிலையத்தில் மனு கொடுத்தார்.இதையடுத்து 6 முக்கிய நிபந்தனைகளை விதித்து போலீஸ் அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது. அதன்படி ஆர்ப்பாட்டத்திற்கு மேடை அமைப்பதற்கு அனுமதி இல்லை, பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையுறு இல்லாமல் ஆர்ப்பாட்டம் நடத்தவேண்டும்.பள்ளி, கல்லூரி மற்றும் போட்டி தேர்வுகளுக்கு செல்லும் மாணவர்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் நடத்தவேண்டும், மேலும் சிறப்பு அழைப்பாளர்கள் யாரேனும் வெளிமாவட்டத்தில் இருந்து வந்தால் தகவல் தெரிவிக்கவேண்டும். ஆர்ப்பாட்டத்திற்கு வரும் நபர்களின் வாகனங்களை போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் நிறுத்தவேண்டும். ஆர்ப்பாட்டத்திற்கு கூம்பு வடிவ ஒலி அமைப்புகள் பயன்படுத்கூடாது ஆகிய நிபந்தனைகள் விதிக்கப்பட்டன.”,




திண்டுக்கல் மாவட்ட பேருந்து நிலையத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த 206 தொடர்பாக வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடைபெற்ற பொய்க்கால் ஆட்டம், கரகாட்டம் நிகழ்ச்சிகளை துணை ஆட்சியர் ராஜேஸ்வரி சுவி தொடங்கி வைத்தார். மேலும் பொதுமக்களுக்கு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்த துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டன.

# தமிழகம் முழுவதும் விவசாயிகளுக்கு அழைப்பு; சம்பா நெற்பயிரை காப்பீடு செய்ய 30ம் தேதி வரை அவகாசம்: அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தகவல்



சென்னை: நவ.17–

தமிழ்நாட்டில் சம்பா நெற்பயிரைக் காப்பீடு செய்வதற்கான காலக்கெடு, விவசாயிகளின் நலன் கருதி வரும் 30ம் தேதி வரை நீட்டிக்கப்படுவதாக வேளாண்மைத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார். தமிழ்நாடு முழுவதும் தற்போது சம்பா நெல் சாகுபடிப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. இதுவரை சுமார் 26.25 லட்சம் ஏக்கர் பரப்பளவில் நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலையில், 6.27 லட்சம் விவசாயிகள் தங்களது 15 லட்சம் ஏக்கர் பயிர்களைக் காப்பீடு செய்துள்ளனர். இது மொத்த சாகுபடி பரப்பில் 57 சதவீதமாகும்.

தஞ்சாவூர், நாகப்பட்டினம் உள்ளிட்ட 27 மாவட்டங்களில் சம்பா நெற்பயிரைக் காப்பீடு செய்வதற்கான கடைசி தேதி வரும் 15ம் தேதியுடன் முடிவடைந்திருந்தது. ஆனால், தொடர் மழையால் அறுவடை மற்றும் நடவுப் பணிகளில் ஏற்பட்ட தாமதம், வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளால் கிராம நிர்வாக அலுவலர்கள் அடங்கல் சான்றிதழ் வழங்குவதில் ஏற்பட்ட காலதாமதம் போன்ற காரணங்களால் பல விவசாயிகளால் குறித்த தேதிக்குள் காப்பீடு செய்ய இயலவில்லை.

இதனையடுத்து, பயிர்க் காப்பீட்டுக்கான காலக்கெடுவை நீட்டிக்க வேண்டும் என்று விவசாயிகள் அரசுக்குத் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தனர். விவசாயிகளின் இந்தக் கோரிக்கையை ஏற்று, முதலமைச்சரின் துரித நடவடிக்கையின் பேரில் தமிழ்நாடு அரசு விடுத்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட ஒன்றிய அரசு, காலக்கெடுவை நீட்டித்து ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதுகுறித்து அமைச்சர் எம்.ஆர் .கே.பன்னீர் செல்வம் வெளியிட்ட அறிக்கையில், 'விடுபட்ட அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற வேண்டும் என்ற உயர் நோக்குடன், சம்பா, தாளடி, பிசானம் நெற்பயிர்க் காப்பீட்டுக்கான கடைசி தேதி வரும் 30ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார். எனவே, இதுவரை சம்பா நெற்பயிரைக் காப்பீடு செய்யாத விவசாயிகள் இந்த வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். உரிய ஆவணங்களுடன் அருகிலுள்ள பொது சேவை மையங்கள், தொடக்க வேளாண் கடன் கூட்டுறவு சங்கங்கள் அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளை அணுகி, வரும் 30ம் தேதிக்குள் தங்களது பயிர்களைக் காப்பீடு செய்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், வேளாண்மைத் துறை அலுவலர்கள் தத்தமது பகுதிகளில் உள்ள விவசாயிகளை அணுகி, காப்பீடு செய்வதைத் துரிதப்படுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# தவெக தலைவர் விஜய் அதிமுக கூட்டணியில் இணைய வேண்டும்

## தமாகா பொதுச் செயலாளர் யுவராஜ் ஈரோட்டில் செய்தியாளர்களிடம் விருப்பம்



ஈரோடு. நவ. 17

தமிழக வெற்றி கழக தலைவர் விஜய் அதிமுகவுடன் கூட்டணி வைக்க வேண்டும் என ஈரோட்டில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் தமிழ் மாநில காங்கிரஸ் பொதுச் செயலாளர் யுவராஜ் விருப்பம் தெரிவித்தார்.

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஈரோட்டில் நேற்று ஆட்டோ ஓட்டுனர்களுக்கு உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் பி. யுவராஜ் நூறு ஆட்டோ டிரைவர்களுக்கு, சீருடை மற்றும் அரிசி உள்ளிட்ட உணவுப் பொருட்களை வழங்கினார். அதோடு அவர்களின் குடும்பங்களுக்கு குடும்ப உதவிகளையும் வழங்கினார்.

பின்னர் அவர் செய்தியாளர்களை சந்தித்தார்.. அப்போது அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

வரும் 2026 சட்டமன்ற பொது தேர்தலில் அதிமுக பாஜக கூட்டணி வெற்றி பெறும். அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி முதலமைச்சர் ஆவது உறுதி.

எங்கள் கூட்டணியை பொறுத்தவரை எடப்பாடி பழனிசாமி தான் முதல்வர் வேட்பாளர். பல்வேறு மாநிலங்களில் எங்கள் கூட்டணி கட்சியான பாரதிய ஜனதா கட்சி தொடர்ந்து வெற்றி பெற்று வருகிறது. பாரதிய ஜனதா கட்சிக்கு நாடு முழுவதும் சிறுபான்மையினர் ஆதரவு அளித்து.

ஆனால் தமிழ்நாட்டில் தான் பாரதிய ஜனதா கட்சி, சிறுபான்மையினர் மக்களுக்கு எதிரானவர்கள் என்ற ஒரு பொய்யான விஷயத்தை இங்கு உள்ளவர்கள் சிலர் கட்டமைத்து வருகின்றனர். அந்தப் பொய்யான கட்டமைப்பு வரும் சட்டமன்றத் தேர்தலில் உடைத்து எறியப்படும்.

அதேநேரம் வருகின்ற 2026 சட்டமன்ற பொது தேர்தலில் அதிமுகவுடன், தமிழக வெற்றி கழகம் கூட்டணி அமைத்து போட்டியிட வேண்டும். அப்பொழுது தான் திமுக ஆட்சியை வீட்டிற்கு அனுப்ப முடியும். அதற்காக தமிழக வெற்றி கழகம் அதிமுக, பாஜக, தமாகா கூட்டணியில் இணைய வேண்டும். இல்லையென்றால் தமிழக வெற்றிக்கழகத் தொண்டர்கள் அரசியல் ரீதியாக மிகவும் பாதிக்கப்படுவார்கள். இந்திய தேர்தல் ஆணையம் கடந்த 20 ஆண்டுகாலமாக சிறப்பு வாக்காளர் திருத்தம் பணியை செய்யவில்லை. மேலும் ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதியில் ஆயிரக்கணக்கான போலி வாக்காளர்கள். இறந்தவர்கள் பலரும் அந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். அதேபோல் எஸ் ஐ ஆர் படிவத்தை திமுகவினரே வினியோகம் செய்து வருகின்றனர். இது போன்ற நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் கவனத்தில் கொள்ள வேண்டும். வாக்காளர் படிவத்தை நிரப்புவதில் பொதுமக்களுக்கு தேர்தல் அதிகாரிகள் உதவ வேண்டும்.

அதே நேரம் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணிக்கு இன்னும் சற்று கால அவகாசம் வழங்க தேர்தல் ஆணையம் முன்னேற வேண்டும். தேர்தல் படிவத்தை திருப்பி அனுப்பும் தேதியை நீட்டிக்க வேண்டும். அதே நேரம் எஸ் ஐ ஆர் நடைமுறையை தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி வரவேற்கிறது. இவ்வாறு தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் பி. யுவராஜ் செய்தியாளர்கள் மத்தியில் தெரிவித்தார்.

# தமிழ்நாட்டில் சாதிக்கொலைகள் தடுப்பது குறித்து விரிவான அறிக்கையை 3 பேர் குழு 3 மாதத்தில் சமர்ப்பிக்க அரசு உத்தரவு

சென்னை: நவ.17–

தமிழகத்தில் சாதியக் கொலைகளைத் தடுப்பது குறித்து விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு புதிதாக அமைக்கப்பட்ட 3 பேர் கொண்ட குழுவை தமிழக அரசு கேட்டுக் கொண்டுள்ளது. தமிழகத்தில் நடக்கும் ஆணவப் படுகொலைகளை தடுக்கும் விதத்தில்.

பரிந்துரைகளை வழங்குவதற்காக, சென்னை உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி கே.என். பாஷாவின் தலைமையில் ஒரு நபர் கமிஷன் அமைக்கப்படும் என்று குறிப்பிட்டு இந்த அறிவிப்பை செயல்படுத்தும் விதத்தில் ஓய்வுபெற்ற நீதிபதி கே.என்.பாஷா தலைமையில், ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி பழனிகுமார், ஓய்வு பெற்ற ஐபிஎஸ் அதிகாரி ராமநாதன் ஆகியோரை உறுப்பினர்களாக கொண்ட கமிஷனை அமைக்கப்பட்டது.

இந்தக் குழு, இதுபோன்ற குற்றங்களைத் தடுப்பதற்கான தடுப்பு நடவடிக்கைகள், பொது விழிப்புணர்வுத் திட்டம் மற்றும் அரசாங்கத்திற்கான குறிப்பிட்ட, நிலையான மற்றும் செயல்படக்கூடிய நடவடிக்கைகளை வரைவு செய்யும். கடந்த ஜூலை மாதம், 27 வயது தலித் ஐடி ஊழியரான கவின் செல்வகணேஷ், எம்பிசி சமூகத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணும் காதலித்ததற்காக பட்டப்பகலில் வெட்டிக் கொல்லப்பட்டார்.

இதைத் தொடர்ந்து, அரசியல்வாதிகள், சிவில் சமூகக் குழுக்கள் மற்றும் நிபுணர்கள், சமூக எல்லைகளைத் தாண்டி திருமணம் செய்து கொள்ளும் மக்களின் சாதி அடிப்படையிலான கொலைகள் அதிகரித்து வருவதைக் கருத்தில் கொள்ளுமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பூண்டி, செம்பரம்பாக்கம், புழல் ஏரிகளில் இருந்து 3200 கன அடி உபரிநீர் திறப்பு: நீர்வளத்துறை தகவல்

சென்னை: நவ. 17–

அணைகளின் பாதுகாப்பு கருதி பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து 2000 கன அடியும், செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து 600 கன அடியும், புழல் ஏரியில் இருந்து 600 கன அடியும் உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. வடகிழக்கு பருவமழை காரணமாக திருவள்ளூர் மாவட்டத்தில் பரவலாக விட்டுவிட்டு மழை பெய்து வருகிறது. இதனால், மாவட்டத்தில் உள்ள அனைத்து நீர்நிலைகள் வேகமாக நிரம்பி வருகிறது. குறிப்பாக சென்னைக்கு குடிநீர் வழங்கும் முக்கிய நீர்தேக்கங்களும் வேகமாக நிரம்பியது.அதன்படி, நேற்று காலை 10 மணி நிலவரப்படி பூண்டி சத்தியமூர்த்தி சாகர் நீர்த்தேக்கத்தின் 35 அடி மொத்த உயரத்தில் 33.47 அடி உயரத்திற்கும், மொத்த கொள்ளளவான 3231 மில்லியன் கன அடியில் தற்போது தண்ணீர் இருப்பு 2660 மில்லியன் கன அடியாக உள்ளது. ஏரிக்கு வினாடிக்கு 790 கன அடி மழைநீர் வந்து கொண்டுள்ளது.பேபி கால்வாய் வழியாக வினாடிக்கு 47 கன அடி நீர் அனுப்பி வைக்கப்படுகிறது.

இதனைத்தொடர்ந்து நீர்த்தேக்கத்தில் இருந்து வினாடிக்கு 2000 கன அடி வீதம் உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. செம்பரம்பாக்கம் ஏரியின் 24 அடி மொத்த உயரத்தில் 21.79 அடி உயரத்திற்கும், மொத்த கொள்ளளவான 3645 மில்லியன் கன அடியில் தற்போது தண்ணீர் இருப்பு 3064 மில்லியன் கன அடியாக உள்ளது. ஏரிக்கு நீர்வரத்து வினாடிக்கு 100 கன அடியாகவும், சென்னை மாநகர மக்களின் குடிநீருக்காக வினாடிக்கு 165 கன அடி தண்ணீர் அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும், ஏரியிலிருந்து வினாடிக்கு 600 கன அடி வீதம் உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. புழல் ஏரியின் 21.20 அடி மொத்த உயரத்தில் 19.40 அடி உயரத்திற்கும், மொத்த கொள்ளளவான 3300 மில்லியன் கன அடியில் தற்போது தண்ணீர் இருப்பு 2892 மில்லியன் கன அடியாக உள்ளது. ஏரிக்கு நீர்வரத்து வினாடிக்கு 295 கன அடியாக உள்ளது.

சென்னை மாநகர மக்களின் குடிநீருக்காக வினாடிக்கு 184 கன அடி விதம் தண்ணீர் அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் புழல் ஏரியிலிருந்து வினாடிக்கு 600 கன அடி வீதம் உபரி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. சோழவரம் ஏரியின் 18.86 அடி மொத்த உயரத்தில் 15.01 அடி உயரத்திற்கும், மொத்த கொள்ளளவான 1081 மில்லியன் கன அடியில் தற்போது தண்ணீர் இருப்பு 676 மில்லியன் கன அடியாக உள்ளது. ஏரிக்கு நீர்வரத்து இல்லை. கண்ணன்கோட்டை ஏரியின் 36.61 அடி மொத்த உயரத்தில் 34.70 அடி உயரத்திற்கும், மொத்த கொள்ளளவான 500 மில்லியன் கன அடியில் தற்போது தண்ணீர் இருப்பு 437 மில்லியன் கன அடியாக உள்ளது. ஏரிக்கு நீர் வரத்து இல்லை. சென்னை மாநகர மக்களின் குடிநீருக்காக வினாடிக்கு 2 கன அடி வீதம் தண்ணீர் அனுப்பி வைக்கப்படுகிறது. அதன்படி 5 ஏரிகளில் தற்போது 9729 மில்லியன் கன அடி நீர் இருப்பு உள்ளதாக வழி நிலக்கோட்ட செயற்பொறியாளர் ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

# வன்னியர் உள் இட ஒதுக்கீடு கோரி தமிழகம் முழுவதும் டிசம்பர் 17ந்தேதி போராட்டம் அன்புமணி

“சென்னை: நவ.17–

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி தொண்டர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:என் உயிரினும் மேலான பாட்டாளி சொந்தங்களே,



நமக்கே உரித்தானகற்களும், முட்களும் நிறைந்த சமூகநீதியை நோக்கிய இன்னொரு போராட்டப் பாதையில் பயணத்தைத் தொடங்கியிருக்கிறோம். தமிழ்நாட்டில் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் வன்னியர்களுக்கு குறைந்தது 15 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி அடுத்த மாதம் (டிசம்பர்) 17ந்தேதி தமிழகம் முழுவதும் நாம் நடத்தவிருக்கும் அரசு அலுவலகங்களை முற்றுகையிட்டு சிறை நிரப்பும் போராட்டத்தைப் பற்றி தான் நான் குறிப்பிடுகிறேன்.தி.மு.க. அரசின் சமூக அநீதிகளைக் கண்டு தி.மு.க.வில் உள்ள வன்னியர்களும் கொந்தளித்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கும் அதை வெளிப்படுத்த ஒரு வழி தேவைப்படுகிறது. அதேபோல், அதி.மு.க., காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளுமே வன்னியர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளனர். இயல்பாகவே நாம் தான் வன்னியர்களுக்கான சமூகநீதி போராட்டத்தை முன்னெடுத்து வருகிறோம். எனவே, நமது பாட்டாளி சொந்தங்கள் அடுத்த மாதம் (டிசம்பர்) 17ந்தேதி நாம் நடத்தவிருக்கும் 'வன்னியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்க வலியுறுத்தி சிறை நிரப்பும் போராட்டத்தின்' நோக்கங்களை விளக்கும் துண்டறிக்கைகளை அனைத்துக் கட்சியினரிடமும் கொடுத்து, குடும்பத்துடன் வன்னியர் இட ஒதுக்கீட்டுப் போராட்டத்தில் பங்கேற்க வருமாறு அன்புடன் அழைப்பு விடுக்க வேண்டும். தமிழ்நாட்டின் அனைத்து சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் அரசு அலுவலகங்களை முற்றுகையிட்டு, சிறை நிரப்புவதற்காக நாம் நடத்தவிருக்கும் போராட்டம் பத்தோடு பதினொன்றாக இருக்கக்கூடாது. நமது வலிகளையும், வலிமையையும் வெளிப்படுத்தும் வகையில் வெற்றிகரமாக அமைய வேண்டும். பாட்டாளிகளை அடைக்க தமிழ்நாட்டின் சிறைகள் போதாது என்று அஞ்சும் அளவுக்கும், வன்னியர்களுக்கான சமூகநீதியை இனியும் தாமதிக்கக்கூடாது என்று நினைத்து உடனடியாக வன்னியர் இட ஒதுக்கீட்டுச் சட்டத்தை நிறைவேற்றும் அளவுக்கும் டிசம்பர் 17ந்தேதி சிறை நிரப்பும் போராட்டம் அமைய வேண்டும்.இவ்வாறு அதில் கூறி உள்ளார்.”,

# திருப்போரூரில் பயிற்சி விமானம் விழுந்து நொறுங்கிய இடத்தில் விமானப்படையினர் முகாம் அமைத்து ஆய்வு



சென்னை: நவ.17–

திருப்போரூரில் பயிற்சி விமானம் விழுந்து நொறுங்கிய இடத்தில் விமானப் படையினர் முகாம் அமைத்து, ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். தாம்பரத்தில் உள்ள விமானப்படை பயிற்சி நிலையத்தில் இருந்து நேற்று முன்தினம் பகல் 1.30 மணிக்கு `பிளேட்டஸ் பி.சி 7' என்ற ஒரு பயிற்சி விமானம் திருப்போரூர் கழினிவெளி பகுதியில் வான்வெளியில் பயிற்சியில் ஈடுபட்டிருந்தது. அப்போது, விமானத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக, விமானத்தை தொடர்ச்சியாக இயக்க முடியாத நிலை ஏற்பட்டதாக தெரிகிறது.

இதையடுத்து. விமானத்தை இயக்கிய விமானி சுபன் பாராசூட்டில் குதித்து உயிர் தப்பினார். விமானி இல்லாமல் தாறுமாறாக இயங்கிய விமானம் தண்டலம், திருப்போரூர் கிராமங்களில் வீடுகளின் மேல் சுற்றியபடி வந்து நெம்மேலி சாலையில் உள்ள தனியார் உப்பு பேக்கிங் செய்யும் தொழிற்சாலையின் பின்பக்கத்தில் விழுந்து அப்பளமாக நொறுங்கியது. இதனையறிந்த விமானப்படையினர், நேற்று முன்தினம் மாலை விபத்து நடந்த தொழிற்சாலையையும், அதை சுற்றியுள்ள பகுதியையும் தங்களின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

இரவு முதலே துப்பாக்கி ஏந்திய விமானப்படையினர் பாதுகாப்பில் அப்பகுதி இயங்கியது. நேற்று அதிகாலை விடிந்ததும் விமானம் விழுந்த இடத்தில் உள்ள சேற்றை வெளியேற்றும் பணியில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். விமானத்தின் இஞ்சின், கருப்புப்பெட்டி, டயர்கள் போன்றவை சுமார் 10 அடி ஆழத்தில் சேற்றில் புதைந்திருக்கலாம் என்றும் அவற்றை தேடி எடுத்த பிறகே இப்பணிகள் முடிவடையும் என்று தெரிகிறது.

இந்நிலையில், டெல்லியில் இருந்து விமானப்படையின் வல்லுனர் குழு வர உள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. விமானம் விழுந்த தொழிற்சாலை வழக்கம்போல் உள்பகுதியில் இயங்கலாம் என்றும் தொழிலாளர்களை குறைந்த அளவில் வைத்து வேலை செய்துக்கொள்ளுமாறும் விமானப்படை சார்பில் தொழிற்சாலை நிர்வாகத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விமானம் விழுந்த இடத்தில் இருந்து மேற்கு திசையில் 500 மீட்டர் தொலைவில் தனியார் பள்ளி ஒன்று 1000 குழந்தைகளுடன் செயல்பட்டு வருகிறது. அதேபோன்று, வடக்கு திசையில் 1500 வீடுகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றும் 500 மீட்டர் தூரத்தில் உள்ளது. மேலும், விமானம் விழுந்த தொழிற்சாலையில் இருந்து 100 மீட்டர் தூரத்தில் மனைப்பிரிவு ஒன்றும் உள்ளது.

அதில், 20க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. தொழிற்சாலையில் 70க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர். விமானம் விழுந்த இடத்தில் இருந்து 20 அடி தூரத்தில் தொழிற்சாலை மீது விழுந்து இருந்தால் தொழிற்சாலை முழுவதும் எரிந்து சாம்பலாகி இருக்கும். அனைத்து தொழிலாளர்களின் உயிருக்கும் பெரும் ஆபத்து நேர்ந்திருக்கும். ஆகவே, பயிற்சி விமானங்கள் இனி தங்களின் வான்வெளி பயிற்சி பாதையை மாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாக சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

விமானம் விழுந்த இடத்தில் நேற்று காலை முதலே விமானப்படையினர் சோதனையை தொடங்கி நடத்தி வந்தனர். விமானத்தின் எஞ்சின் மற்றும் கருப்புப் பெட்டியை மீட்பதில் தொடர் சிக்கல் ஏற்பட்ட நிலையில், பொக்லைன் இயந்திரம் கொண்டு வரப்பட்டது. அதன் மூலம் சுமார் 10 அடி ஆழத்திற்கு சேறு அகற்றி வெளியே கொட்டப்பட்டது. பகல் 12 மணியளவில் விமானத்தின் முக்கிய பாகமான கருப்புப் பெட்டி மீட்கப்பட்டது. அதை பாதுகாப்பாக விமானப்படையினர், பேக்கிங் செய்து எடுத்துச்சென்றனர். தொடர்ந்து, விமான இன்ஜினை மீட்கும்பணியில்தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA**, on behalf of **K.SABIULLA**, printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421